**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 26/2010 P.W.6 Additional Witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. சுகவனேஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது குளச்சல் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் அரசு மருத்துவரான திருமதி. பத்மா என்பவர் தற்போது அரசுமருத்துவமனையிலிருந்து சென்று வெளிநாட்டில் குடியிருந்து வருவதால் இந்த வழக்கு சம்மந்தமாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி கூறுவதற்கு அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 31.05.2009 ம் தேதி மதியம் 01.45 மணியளவில் மருத்துவர் திருமதி. பத்மா என்பவர் பணியில் இருக்கும்போது குளச்சல் அரசு மருத்துவமனைக்கு 45 வயது மதிக்கதக்க மரிய ரேமண்ட் என்பவர் தானாக என்னிடம் சிகிட்சைக்கு வந்துள்ளார். அவர் தன்னை 31.05.2009 அன்று காலை 11.30 மணியளவில் 4 தெரிந்த நபர்கள் குளச்சல், பஸ் ஸ்டாண்ட் எதிரே அமைந்துள்ள பார்க் ஹோட்டல் அருகே வைத்து கல் மற்றும் கம்பால் தாக்கியதாக கூறியுள்ளார். அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவருக்கு கீழ்கண்ட காயங்கள் ஏற்பட்டுள்ளது.

காயம் 1. 4 x 3 x 2 cm அளவில் முன்நெற்றியில் சிதைந்த காயம்இருந்துள்ளது.

அவரை மேல்சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அவருக்கு ஏற்பட்ட காயமானது சிறுகாயம் என்று கருத்துரை கூறி சான்று வழங்கியுள்ளார். அவர் **அளித்த கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இதே சம்பவத்தில் கடந்த 31.05.2009 ம் தேதி அன்று மதியம் 01.30 மணியளவில் அவர் பணியில் இருக்கும்போது குளச்சல் அரசு மருத்துவமனைக்கு 35 வயது மதிக்கதக்க மரிய நிக்சன் என்பவர் தானாக சிகிட்சைக்காக வந்துள்ளார். அவர் தன்னை 31.05.2009 என்பது 31.05.2008 என்று கையால் எழுதப்பட்ட தேதியானது தவறாக உள்ளது. அன்று காலை 11.30 மணியளவில் தெரிந்த 4 நபர்கள் கம்பைக்கொண்டு குளச்சல் பஸ் ஸ்டாண்ட் எதிரே அமைந்துள்ள பார்க் ஹோட்டலில் வைத்து தாக்கியதாக கூறியுள்ளார்.

அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டுள்ளது.

காயம் 1. 3x 2x 2 cm அளவில் வலது பக்க மூக்கின் அருகே காயம் இருந்துள்ளது.

காயம் 2. 0.5x 0.5 cm அளவில் வலது தோள்பட்டையில் காயம் இருந்துள்ளது.

காயம் 3. சிராய்ப்பு காயம் 0.5 cm அளவில் இடது ஆள்காட்டி விரலில் சிராய்ப்பு காயம் காணப்பட்டுள்ளது. மூக்கில் வீக்க காயம் இருந்துள்ளது.

அவரை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள்ள ENT பிரிவில் நுண்கதிர் படம் எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார். அவருக்கு மூக்கில் எலும்பு முறிவு இருந்துள்ளது. ஆகவே, அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 1 வது காயாமானது கொடுங்காயம் என்று கருத்துரை கூறி சான்று வழங்கியுள்ளார். அவர் **அளித்த கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1. காயம்பட்ட நபர்களும் மருத்துவமனைக்கு ஒரே நேரத்தில் தான் வந்துள்ளார்கள் என்றால் சரிதான். தன்னை தெரிந்த 4 நபர்கள்தாக்கியதாக தான் மேற்படி வழக்காவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு

சம்பவமானது 31.05.2009 அன்று காலை 11.30 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் சொன்ன காயங்கள் அனைத்தும் ஒரு நபர் வாகனத்திலிருந்து கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.